# எட்டுத்தொகையில் தொழில்வழி அறம்

***முனைவர் த. சுதா***
தமிழ்த்துறைத் தலைவர், காமராஜ் மகளிர் கல்லூரி
தூத்துக்குடி

**மலர்: 12**
**சிறப்பிதழ்: 1**
**மாதம்: மார்ச்**
**வருடம்: 2025**
**P-ISSN: 2321-788X**
**E-ISSN: 2582-0397**
**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958661

***முன்னுரை***

*சங்க காலத்தில் மக்களிடம் பாகுபாடு நில இயற்கையும் தொழில் பண்பையும் அடிப்படையாகக் கொண்டே இருந்தது. சமூகத்தில் தொழில் அடிப்படையில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என நான்கு பிரிவினர் இருந்தனர். ஒழுக்க நெறி கற்பித்து வந்தவரை அந்தணர் எனவும், நீதி வழங்கி நடுவுநிலை தவறாது, நாட்டு மக்களுக்கு கொண்டு கொடுத்து வந்தவரை அரசர் எனவும், வணிகர் என்பவர் வாணிகம் செய்தனர் எனவும், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழவுத் தொழில் செய்து வந்தவரை வேளாளர் எனவும் வழங்கினர். தொழில்வழி அறம் புரிந்த அந்தணர், அரசர், வணிகர், வேளாண் மாந்தர் ஆகியோர் தத்தம் கடமைகளையாற்றிச் சமுதாய ஆக்கத்திற்கு துணை நின்றனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***அந்தணர்***

*ஒழுக்கநெறி கற்பித்து வந்தவரை அந்தணர் என்றனர். வேதங்களை அவற்றின் பொருள் எல்லோருக்கும் புரியும்படி ஓதி அவை கூறிய ஒழுக்கங்களை மேற்கொண்டு இந்நிலவுலகத்தில் இன்பம் கைவரப் பெற்றவராய் அறத்தினின்றும் தவறாது எல்லா உயிர்களிடத்தும் அருள் நிரம்பியவர் அந்தணர் எனப்பட்டனர். இவர்கள் இயல்பிலே மனஅமைதி பெற்றவர்களாகவும் தந்நலம் துறந்தவர்களாகவும் மன்னன் முதல் மக்கள் வரை எல்லோராலும் மதிக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர். அவர்களை அறவோர், அருளாளர், ஆன்றோர், சான்றோர், மறையோர் என்று பலரும் புகழ்ந்து ள்ளனர். இவர்கள் ஓதல், வேட்டல், ஈதல், ஏற்றல், எனும் தொழில்களைச் செய்தனர். அந்தணர்க்குரிய தொழில்களில் ஓதல் தலைச்சிறந்ததாகக் கருதப்படுவதால் இவர்கள் ஓதல் அந்தணர் என்றழைக்கப்பட்டனர். ஓதல் மூலமாக அறநெறிகளைக் கற்பிக்கின்றனர். ஓதல் மூலமாக அறநெறிகளைக் கற்பிக்கின்றனர். இவர்கள் வைகறைப் பொழுதில் வேதம் ஓதுவர். இவர்கள் ஆறு தொழிலையும் சிறப்பாகச் செய்தனர் என்பதை,*

***ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்***
***ஈதல் ஏற்றல் என்று ஆறுபுரிந் தொழுகும்***
***அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுக (பதிற். 24:6-8)***

*என்ற அடிகள் உணர்த்துகின்றன. இவர்கள் ஓரிடத்தில் தங்கியிராமல் புலவர்கள் போன்று ஊர்தோறும் சென்று நாட்டு மக்களுக்கு நல்லறத்தைப் புகட்டினர். இவ்வாறு ஊர்தோறும் செல்வதற்கு "ஊன்றுகோல்", "தண்ணீர் கமண்டலம்" "ஆசனம்" போன்றவற்றை உடன் எடுத்துச் சென்றனர். இதனை,*

***நூலே கரகம் முக்கோல் மனையே***
***ஆயுங் காலை அந்தணர்க்குரிய***[1]
***(தொல்.பொருள்-நூ.எ.70)***

என்கிறார் தொல்காப்பியர். அந்தணர்களின் முக்கியமான தொழில் உலகமக்களின் துன்பங்களைப் போக்கி அருள் புரிந்து ஓம்புவதாகும். இவற்றைத் தவிர இடையில் மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க மன்னன்நாட்டைவிட்டுசெல்லும்போதுநாடாளும் தொழில் அந்தணர்க்கு உரியதாகும். இதனை,

***அந்தணாளர்க் அரசுவரை இன்றே***[2]
***(தொல். பொருள் -நூ.எ.83)***

என்பதைத் தெளிவுபடுத்துகிறார் தொல்காப்பியர். மேலும் அந்தணர்கள் என்போர் சாந்தத்தின் நிலையமானவர்கள். அவர்கள் தர்மம் தவறாது எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டினர் என்பதை,

***அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்வுயிர்க்கும்***
***செந்தண்மை பூண்டு ஒழுகலான்***[3]
***(குறள்.எண்.30)***

என்கிறார் திருவள்ளுவர். இவர்கள் தீயை வழிபட்டனர் என்பதை,

***அறு தொழில் அந்தணர் அறம்புரிந் தெடுக்க***
***தீயொடு விளங்கும் (புறம் 397: 20-21)***

என்கிறது புறம். இவர்கள் வளர்க்கும் தீ மூன்று வகைப்படும். அவை "ஆகவனியம்", "தக்கிணார்க்கினி", "காருகபத்தியம்". அவை வேதத்தை வழங்குதலையும் வேதம் ஓதுவார்க்குத் தக்கிணார்கினி அளித்தலையும் பூலகைக் காத்தலையும் குறிக்கிறது. இவர்கள் நாட்டுநலம் கருதி மக்கள் நலங்கருதி வேதங்களை ஓதியும் வேத நூல்களில் முறைப்படி வேள்வியும் செய்தனர் என்பதைக்,

***கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்***
***(புறம் 361.4)***

என்கிறது புறநானூறு. மேலும்,

***பார்ப்பார்க் கல்லது பணிபறியலையே***
***(பதிற். 63.1)***

அறுவகை ஒழுக்கங்களை உடைய பார்ப்பாருக்குப் பணிய வேண்டும் என்பது பண்டையோர் கொள்கை என்று கபிலர் குறிப்பிடுகிறார். அந்தணர்கள் வேதத்தை அறநெறிப்படி ஓதி நாட்டு மக்களுக்கு நீதி கருத்துக்களைக் கூறுபவர்களாகத் திகழ்கின்றார்கள்.

***அரசர்***

அரசனது தொழில் உலகுக்கு நன்மை செய்தலாகும். அதற்கு மன்னன் மயக்கம் தீர்ந்த அறிவும் நடுவு நிலையும், முறைவேண்டுபவர்க்கும், குறை வேண்டுபவர்க்கும் எளிதாகவும் இனிதாகவும் நீதி வழங்கும் பண்பும் உதவும் உள்ளமும் பெற்றிருத்தல் வேண்டும். அரசன் தன்னை மதியாத வேற்றரசரை வீரத்தால் அஞ்சப் செய்தல் வேண்டும். தன்னை மதிக்கும் நட்பரசை மேன்மேலும் தனது அன்பினால் தழுவிச் செல்ல வேண்டும். இங்ஙனம் அரசன் வீரமும், அருளும் உடையவனாய் ஆட்சி செய்தால் நாட்டில் எப்பொழுதும் அமைதி நிலைபெற்றிருக்கும். மன்னனது வெற்றிக்குக் காரணம் அவனது வலிமை அல்லாமல் அறமுறையே சிறப்புச் செய்கிறது. அறம் என்பது நடுவுநிலைமை. அதாவது நம்மவரென்று ஒருவரது தீமைக்கு ஆக்கமும் அடுத்தவரென்று நன் முயற்சிக்கு அழிவும் ஏற்படாதிருத்தல் வேண்டும். மன்னனது தொழில் வீரமும் மென்மையும் கொடையும் உரிய இடத்தில் புலப்படுத்தி நாடு வளம்பெறப் பாடுபடுவது என்பதை,

***"அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்***
***அதனால் நமர் எனக் கோல் கோடாது***
***பிறரெனக் குணங்கொல்லாது,***
***ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும்***
***திங்கள் அன்ன தண் பெருஞ்சாயலும்***
***வானத்து அன்ன வன்மையும், மூன்றும்***
***உடையை ஆகி, இல்லோர் கையற,"***
***(புறம். 55:10-16)***

என்ற அடிகள் உணர்த்துகின்றன. அரசன் குடிமக்களுக்கு வளம் உண்டா க்கிக் கொடுத்து அதன்மூலம் அரசன் அவர்களிடம் அன்புடன் திரைபெறுதல் வேண்டும். மேலும் மக்கள் தமது திரைப்பொருளைத் தாமே அன்புடன் செலுத்தும் படி இடங்கொடுக்க வேண்டும். தன்நாட்டு மக்கள் மேன்மேலும் வளமாகவும், நலமாகவும் வாழ்வதற்கு நல்ல வசதிகளை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதை,

***"அறிவுடைய வேந்தர் நெறிஅறிந்து கொளினே***
***கோடியாத்து நாடுபெரிது நந்தும்"***
***(புறம். 184:5-6)***

என்ற அடிகள் கூறுகின்றன. இதிலிருந்து அரசன் நாட்டு மக்களிடம் நல்வாழ்வை மனதில் கொண்டு அறநெறி ஆட்சிப் புரிந்த விதத்தை அறிய முடிகிறது.

**வணிகர்**

சங்ககாலச் சமுதாயத்தில் வணிகர் சிறப்பிடம் பெற்றனர். வணிகர் தமக்கோதிய அறநெறியின்றும் தவறாதும் இல்லற நெறியினின்றும் பிறழாதும் மணி, பொன், முத்து ஆகிய பல்வேறு பண்டங்களை விற்போராக விளங்கினர். வாணிகம் இயற்றிய வணிகர் செல்வர்களாக வாழ்ந்தனர். இவர்களது வாணிகத் தொழிலால் நாடு சிறப்புற்றது. வணிகர் நடுவுநிலை தவறாதவர், அறம் நிலைபெற்ற நன்னெஞ்சினை உடையவர். அவ்வணிகர் உழவரின் நெடிய நுகத்திலே தைக்கப்பெற்றப் பலகாணி போல நடுவுநிலை மாறாத நெஞ்சமுடையவர். தம்முடைய பொருட்களையும் பிறருடைய பொருள்களையும் ஒப்பமதிக்கும் மனத்தவர். தம் குடிக்குக் குற்றம் ஏற்படும் என்று அஞ்சி உண்மைப் பேசும் இயல்பினர். இத்தகைய தொழிலின் சிறப்பினை மதுரைக்காஞ்சி,

***வியன் மேவல் விழுச் செல்வத்***
***திருவகையா னிசை சான்ற***
***சிறுகுடிப் பெருந்தொழுவர்[4]***

***(மதுரைக் காஞ்சி.பா.வ.120-122)***

என்ற அடிகள் மூலம் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய வணிகர்களுக்கு எட்டுவகை நற்குணங்கள் உள்ளது என்று திவாகரம் கூறுகிறது. இதனைத், தனிமையாதல், முனிவிலனாதல்,

***இடனறிந்தொழுகுதல், பொழுதொரு புணர்தல்,***
***உறுவது தெரிதல், இறுவதஞ்சாமை,***
***ஈட்டல்,பகுத்தல் என்றிவையெட்டும்***
***வாட்டமில்லா வணிகரதியற்குணம்[5]***

***(சேந்தன் திவாகரம்.பா.எ.299)***

என்று கூறுகிறது.

புறநானூற்றில் இடம்பெற்ற வாணிகம் பண்டமாற்று முறையில்தான் அமைந்துள்ளது. பண்டைத் தமிழர்கள் வாழ்வினை வளப்படுத்த உற்பத்தி செய்யப்பெற்ற. பொருளை விலை கூறி வாணிகம் செய்தமையைப் புறநானூற்றில் காண முடிகிறது. நிலத்தில் உற்பத்தியாகும் பொருட்களை நேர்மையாக, அறத்தோடு விலை கூறி வாணிகம் செய்துள்ளனர். அத்தகைய பொருள் வாணிகம் பலவகையாக நடைபெற்றிருக்கிறது என்பது பாடல்களின் குறிப்புகளால் அறிய முடிகிறது. புறநானூற்றில்,

***மீன்நொடுத்து நெல்குவைஇ***
***மிசை அம்பியின் மனைமறுக்குந்து***

***(புறம். 343: 1-2)***

என்ற அடிகளில் பண்டமாற்று முறையில் மீனை விற்று, அதனால் பெற்ற நெல்லைக் குவித்து வீட்டிற்குக் கொண்டு வந்தனர் என்ற உண்மை வெளிப்படுகின்றது.

**வேளாண் மாந்தர்**

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. உணவு இல்லை என்றால் பண்பாடும் பழம் பெருமையும் சிதைந்துவிடும். ஆதலின் உணவுப்பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றைப் பெருக்குவதற்கு உழவுத் தொழிலாகப் போற்றப்பட்டது. உழவு என்னும் பெயர் உழத்தல் காரணமாகத் தோன்றியது. உழத்தல் என்பது இடைவிடாது முயலும் முயற்சியைக் குறிக்கிறது. மழை, பனி, வெயில் என்றும் காலவேறுபாட்டால் உடம்பில் உருவாகும் தொல்லைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த இடைவிடாது உழைக்கும் முயற்சி இத்தொழிலுக்கு வேண்டப்படுதலின் இத்தொழில் ‘உழவு” என்று அழைக்கப்படுகிறது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக வேண்டப்படும் உணவு ஏனைய தொழில்களைவிட முதன்மையானதாகப் போற்றப்பட்டது. இத்தொழிலைச் செய்வதற்கு அக்கால மக்கள் மழையை நம்பி வாழ்ந்தனர். இத்தகைய மழைத்துளியின்றிப் பசும்புல்லும் தலைகாட்டாது என்பதை,

***“விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே***
***பசும்புல் தலைகாண்பு அரிது”[6]***

***(குறள்.எண்.16)***

எனத் திருக்குறள் உணர்த்துகின்றது.

உயர்ந்த மலைகளும், அடர்ந்த காடுகளும் நிறைந்த பழந்தமிழ் நாட்டில் வானத்திலிருந்து காலமழை பொழிந்து வந்தது. குறித்த பருவகாலத்தில் ஆறுகள் பெருக்கெடுத்து ஏரிகளையும், குளங்களையும் நிரப்பின. இதனால் அக்கால மக்களின் முழுக்கவனமும் உழவுத் தொழில் செய்வதிலே நிரம்பியிருந்தது என்பதைத் தொல்காப்பியம் ,

**"வேளாண் மாந்தர்க் உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"[7]**

***(குறள்.எண்.81)***

என குறிப்பிடுகிறது. உழவுத்தொழில் செழித்து உணவுப்பண்டங்கள் குறைவின்றிக் கிடைத்து வந்தன. நிலவளமும், நீர்வளமும் உணவைத் தடையின்றி உருவாக்கித் தந்து மனித குலத்தின் பசியைப் போக்கி உயிர்வாழ்வை உறுதிப்படச் செய்தமையை,

**"உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே"**

***(புறம்.18:21)***

என்கிறது புறம். சங்க காலத்தில் உழவே தலைமையான தொழிலாக விளங்கியது. உணவின்றேல் உலக உயிர்கள் இல்லை. மக்களுக்கு உணவை விளைத்துக் கொடுக்கும் உழவர், உயிர் கொடுத்தோராகக் கருதப் பெற்றனர். மன்னனின் அறநிலை தவறாது ஆட்சி செய்தற்கு மழையே காரணமாயிற்று.

## நிறைவுரை

சமுதாயம் என்பது தனி மனிதர்கள் சேர்ந்த கூட்டமைப்பாகும். தனி மனிதர்கள் செய்யும் அறங்கள் சமுதாய மேம்பாட்டை உருவாக்குகின்றன. சங்க காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாண் மந்தர் என்று அவரவர் செய்யும் தொழில் அடிப்படையில் அறம் புரிந்து வாழ்ந்தனர். அந்தணர் அற நூல்களின் முடிபொருளை உணர்ந்து அறநெறியொழுகினர். அரசரும் அவர் வழி நின்று நாட்டில் அமைதி நிலவுமாறு அறநெறியில் ஆட்சி நடத்தினர். வணிகர் நடுநிலையாகிய அறநெறி போற்றி வணிகம் செய்தனர். பழந்தமிழ் மக்கள் உணவு திரட்டி உண்ணும் நிலையில் இருந்து உணவை உற்பத்தி செய்யும் நிலைக்குமாறி பல பண்டங்களை உற்பத்தி செய்து அறநெறியோடு செல்வ செழிப்போடு வாழ்ந்தனர் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை உணர்த்துகிறது.

## துணைநூற்பட்டியல்

1. கபிலன் (உ. ஆ) - திருக்குறள், பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரை குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை, மூன்றாம் பதிப்பு - ஆகஸ்ட் 1993.
2. தமிழண்ணல் (உ. ஆ), தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தகநிலையம், மயூரா வளாகம், மதுரை, பதிப்பு - 2008.
3. திவாகரமுனிவர், சேந்தன் திவாகரம், திவாகர முனிவர், கழக வெளியீடு, சென்னை, முதல்பதிப்பு -1958.
4. நாராயண வேலுப்பிள்ளை. எம், சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு, நர்மதா பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2008